C.C 15/15
PW 1
பெயர் கிருஷ்ணசாமி
தேதி 05.12.2020

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2006ம் வருடம் அக்டோபர் மாதம் கிரி என்பவருக்கு நான் ஒரு வர்த்தமான லெட்டர் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் அசாஆ 3 ஆவணம் நான் 2ம் எதிரிக்கு கிரிக்கு எழுதிக்கொடுத்த வர்த்தமான லெட்டர் என்றால் சரியல்ல. 2006க்கு முன்பு 10 வருடத்திற்கு முன்பு வர்த்தமான செலட்டர் எழுதிக்கொடுத்து கிரியிடமிருந்து பணத்தை நான் பெற்றுக்கொண்டு கிரிக்கு திரும்ப அவர்கள் சொத்தை அவர்களுக்கு கிரயம் செய்துக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதில் உள்ள சர்வீஸ்களை நான் எடுத்துக்கொண்டு பணம் பெறாமல் நான் கிரயம் முடித்துக்கொடுத்தேன். 2009ம் வருடம் அசாஆ 3 தொடர்பாக 19.3.09ம் தேதியில் 2ம் எதிரி எனக்கு ஒரு வழக்கறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கறிவிப்பை நான் 21.3.09ம் தேதி பெற்றுக்கொண்டேன் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கறிவிப்பிற்கு நான் பதிலறிவிப்பு அனுப்பினேன் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கறிவிப்பிற்கு பின்பு தான் கிரி என் மீது ஒஎஸ் 49/09 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான; எனக்கு அனுப்பிய வழக்கறிவிப்பு சம்மந்தமாக நான் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று ஒஎஸ்.43/09 என்ற வழக்கின் குறுக்கு விசாரணையின் போது நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சிவில் நீதிமன்றத்தில் என் மீது வழக்கு தொடர்நத் பின்பு தான் நான் மாவட்ட குற்றப்பிரிவில் எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுத்தேன் என்றால் எதிரிகள் என் மீது சிவல் வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியாது. ஒ.எஸ் 43/09 வழக்கு பற்றி எனக்கு தெரியும். சிவில் வழக்கில் எனக்கு எதிராக உத்தரவு பிறப்பித்துவிடுவார்கள் என்ற பயத்தில் தான் நான் தேனி மாவட்ட குற்றப்பிரிவில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. வழக்கறிவிப்பு அனுப்பி 1 3/4 வருடம் கழித்துதான் நான் எதிரிகள் மீது புகார் கொடுத்தேன் என்றால் அதற்கு முன்பாக அல்லது பிற்பாடா என்று எனக்கு தெரியாது. கடந்த 2008 ஏப்ரல் 4ம் தேதி மூர்த்தி எனக்கு வர்த்தமான லெட்டர் கொடுக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் மூர்த்தி எனக்கு அனுப்பிய வர்த்தமான லெட்டர் என்றால் அந்த ஆவணம் எனக்கு கிடைக்கவில்லை. அசாஆ 3 வர்த்தமான லெட்டரில் உள்ள கையெழுத்தும் சிவில் வழக்கு 43/09 உள்ள முதல் மற்றும் குறுக்கு விசாரணையில் உள்ள கையெழுத்தும் ஒன்றுபோல் உள்ளது தான் என்றால் சரியல்ல. அசாஆ 3 நான் எழுதிக்கொடுத்துவிட்டு எதிரிகளின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரி மேல் 2 கிரிமினல் வழக்கு தொடுத்துள்ளேன். அதில் ஒரு வழக்கை நான் வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் குற்ற எண்.21/11 என்ற புகாரை தான் நான் வாபஸ் பெற்றுக்கொண்டது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் 04.05.11ம் தேதியிட்ட உறுதிமொழி ஆவணம் நான் கிரிக்கு எழுதிக்கொடுத்தது என்றால் சரியல்ல. 04.05.11ம் தேதி நான் கிரியிடமிருநது 33 லட்சம் பெற்றுக்கொண்டு ஒரு வர்த்தமான லெடடர் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன தேதியில் 33 லட்சத்தை நான் கிரிக்கு கொடுக்கவில்லை என்றால் அதற்கு வட்டியுடன் நான் செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கிரி என் மீது தாக்கல் செய்த சிவில் வழக்கிற்கு பின்பு தான் நான் பின்யோசனையிட்டு குற்றவழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. கிரிக்கு நான் திருப்பி கொடுக்கவேண்டிய பணத்தை கொடுக்காமல் ஏமாற்றுவதற்காக தான் பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பெருமாள் பக்தர் என்றால் சரிதான். உண்மையான பெருமாள் பக்தராக இருந்தால் பொய் சாட்சி சொல்லமாட்டார்கள் என்றால் சரிதான். எதிரிகளை நான் மோசடிசெய்யவேண்டும் என்ற எண்ணத்தில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.